மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.111/2023</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 16ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.02.2026 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு 1ம் பிரதிவாதி செல்லம்மாள் என்பவர் தாய்மாமன் மகள் உறவு முறை. 1ம் பிரதிவாதியை இரண்டாம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். என் தாய்மாமாவான காலமான ராஜரத்தினம் என்பவர் எனக்கு எந்த சொத்துக்களையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். மேற்படி ராஜரத்தினம் அவர்கள் தனது சொத்துக்களை வாதி, பிரதிவாதிகள் வகையறாவிற்கு மட்டும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2. ராஜரத்தினம் என்பவர் பிரதிவாதிகள் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருந்து வந்தார் என்றால் இல்லை. வாதிகள் பராமரிப்பில் தான் இருந்து வந்தார். 1ம் வாதி செல்லமுத்துவிற்கு ராஜரத்தினமும் ,மரகதமும் எந்த சொத்துக்களையும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். ராஜரத்தினம் மற்றும் மரகதம் ஆகியோர்களை நான் எந்த காலத்திலும் எனது

பராமரிப்பில் வைத்து பராமரித்து வந்தேனா என்றால் இல்லை வந்து பார்த்து போவேன். 1, 2 பிரதிவாதிகளுக்கு ராஜரத்தினம் மற்றும் மரகதம் ஆகியோர்கள் தான் முன்னின்று திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி மரகதம் என்பவரின் உடன் பிறந்த சகோதரரின் மகன் என்றால் சரிதான்.

3. ராஜரத்தினம் உயிரோடு இருந்தபோது மரகதம் ரங்கநாதன், நாகராஜன், செல்லம்மாள், சரவணன், வீரமுத்து ஆகியோர்களுக்கு பதிவு செய்யப்பட்ட உயிர் ஆவணத்தை தனது சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் ஆமாம் அதை பொருத்து எனக்கு ஆட்சேனை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மரகதம் மேற்படி 6 நபர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் தனது வாழ்நாள் வரை வாடகை வாங்கி அனுபவித்துந்தார் என்றால் சரிதான்.

4. ரங்கநாதன் நாகராஜ் சரவணன் வீரமுத்து ஆகியோர்கள் வாடகை வாங்குவதை பொறுத்து தன்னிடம் பிரச்சனை செய்ததாக மரகதம் காங்கேயம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மரகதத்திற்கு உடல்நிலை மனநிலை சரியில்லை என்பதை பொறுத்து நான் ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் ஆவணங்கள் உள்ளது அந்த ஆவணங்கள் 1ம் வாதி செல்லமுத்து வசம் உள்ளது.

5. மரகதத்திற்கு என்ன வியாதி என்றால் அவருக்கு குழந்தைகள் இல்லாததால் மன வியாதி இருந்தது அதற்காக மருத்துவமனைக்குச் சென்று வைத்தியம் ஏதேனும் பார்க்கப்பட்டதா என்றால் வெள்ளகோவிலில் உள்ள பியூர் மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்று வைத்தியம் பார்த்தார்கள். சிகிச்சை அளித்த மருத்துவர் பெயர் என்னவென்றால் அது எனக்கு தெரியாது. மரகதத்திற்கு என்ன நோய் அதற்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். ராஜரத்தினம் தான் ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணங்களில் மரகதம் நல்ல நிலையில் இருப்பதாகத்தான் சொல்லி உள்ளார் என்றும் நாங்கள் தான் மரகதத்தின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் அவருக்கு மனநோய் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

6. ராஜரத்தினம் உயிரோடு இருந்தபோதே 1ம் வாதி செல்லமுத்து என்பவருக்கு எந்த சொத்துக்களையும் அவர் கொடுக்கவில்லை என்றும், மரகதம் இறந்ததற்கு பின்னிட்டு அவரது சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யாக மரகதத்திற்கு மனநோய் இருப்பதாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் தனது கடைசி காலத்தில் கணபதி பாளையத்தில் இருந்து அங்குதான் இறந்தார் என்றால் சரிதான். கணபதி பாளையம் என்பது 1, 2 பிரதிவாதிகளின் சொந்த ஊர் என்றால் சரிதான். வாதிகள் ஒருநாளும் ராஜரத்தினம் மற்றும் மரகதம் ஆகியோர்களை பராமரிக்கவில்லை என்றும் வாதிகள் தான் மேற்படியார்களை பராமரித்து வந்ததாக நான் வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மரகதம் தன்னுடைய சொந்த விருப்பத்தின் பேரில் பிரதிவாதிகளுடன் தான் வசித்து வந்தார் என்றும் அவர்கள் தான் மரகதத்தை பராமரித்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

7. மரகதத்தின் நகைகளை பிரதிவாதிகள் அபகரித்துக் கொண்டதாக நான் சொல்வது உண்மை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மரகதத்தின் ஈம காரியங்களை 1ம் வாதி செய்யவில்லை என்றும் பிரதிவாதிகள் வகையறாவினர்தான் செய்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக மரகதத்தின் இறுதி காரியங்களை வாதிகள் தான் செய்தார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மரகதத்தின் சொத்துக்களை தற்போது 1, 2 பிரதிவாதிகளான செல்லம்மாள் மற்றும் தேவராஜ் ஆகியோர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

8. அந்த சொத்துக்களை கேட்டு தான் வாதிகள் இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது நானும் வாதிகளுடன் வந்து அதற்கான விபரங்களை சொன்னேனா என்றால் ஆமாம் மரகதம் என்பவர் சேதுபதிக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது நான் மரகதம் சேதுபதிக்கு எழுதி வைத்த உயில் சாசனத்தை பார்த்தது இல்லை என்றால் ஆமாம் ராஜரத்தினம் மற்றும் மரகதம் ஆகியோர்கள் எனக்கு தெரிய வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் ஆமாம். 2008 ஆம் ஆண்டு ராஜரத்தினம் என் மீது வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். எனது வீட்டை ராஜரத்தினம் செலவு செய்து தளம் போட்டு கொடுத்து அதில் ஏற்பட்ட வரவு செலவு பிரச்சனை காரணமாக ராஜரத்தினம் என் மீது புகார் கொடுத்தார் என்றால் ஆமாம்.

9. ஆனால் நான் கேட்கவில்லை அவராகத்தான் எனக்கு செய்து கொடுத்தார் அதனால் நான் 30,000/- ரூபாய் ராஜரத்தினத்திற்கு பணம் கொடுக்காமல் ஏமாற்றி விட்டதாக சொல்லி என் மீது காவல்

நிலையத்தில் ராஜரத்தினம் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். ராஜரத்தினம் மற்றும் மரகதம் ஆகியோர்கள் குடும்பத்திற்கு நான் நல்ல நம்பிக்கையான நபர் அல்ல என்றும் அவர்கள் காலமாகும் வரை என்னுடன் நல்ல தொடர்பில் இல்லாமல் இருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் வாதி மற்றும் இதரவாதிகள் தூண்டுதலின் பேரில் நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை முன்னுக்குப் பின் முரணாக சொல்லி தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் பொய்யானது என்றும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.16 18:54:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்